# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 72 / 2022**

திருமதி பொ. சரஸ்வதி,
க/பெ. பொன்னுசாமி (லேட்),
க. எண். 268, கண்ணியங்கிணறு,
குட்டப்பாளையம் அஞ்சல்,
நத்தக்கடையூர் வழி, காங்கயம் தாலுக்கா,
திருப்பூர் மாவட்டம் – 638 108. ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு P.குணசேகர செந்தில்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ காங்கேயம்,
பல்லடம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
4/102, PSG Lodge, சென்னிமலை ரோடு,
காங்கேயம், திருப்பூர் – 638 701.

2) உதவி செயற்பொறியாளர்/ C&I / காங்கேயம்,
பல்லடம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SF No. 3/277, பழையக்கோட்டை ரோடு,
முத்துபாளையனப்பா காம்ப்லெக்ஸ் எதிரில்,
காங்கேயம் – 638 701.

…… எதிர்மனுதாரர்கள்
(திரு. V. கணேஷ், செயற்பொறியாளர்/ இ&ப/ காங்கேயம்
திரு. N. சாய் ஹரி ஹர கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர்/ C&I / காங்கேயம்)

**மனு பெறப்பட்ட நாள்: 29-08-2022**

**கேட்புரை நாள்: 08-12-2022**

**ஆணை நாள்: 03-01-2023**

29.08.2022 அன்று பெறப்பட்ட திருமதி பொ. சரஸ்வதி, க/பெ. பொன்னுசாமி (லேட்), க. எண். 268, கண்ணியங்கிணறு, குட்டப்பாளையம் அஞ்சல், நத்தக்கடையூர்

வழி, காங்கயம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் – 638108 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 72/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.12.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

பல்லடம் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய 26.7.2022 நாளிட்ட ஆணையை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 மின் இணைப்பு எண் 078–001–529–இல் இருந்து வரும் மின்கம்பியை அருகில் உள்ளவர்கள் துண்டித்துவிட்டதாகவும், மின் கம்பிகளை அறுத்து சேதப்படுத்திவரும் நபர்கள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் பேரில் கள ஆய்வு செய்த போது, மின் கம்பத்தில் உள்ள மின் அளவி பெட்டி வரை மின்சாரம் உள்ளதாகவும், மின் வாரியத்திற்கு சொந்தமான மின்அளவி பெட்டி வரை எவ்விதமான சேதமும் இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்ததால் மேல்முறையீட்டாளர் பல்லடம் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 29.12.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், பல்லடம் மின்பகிர்மான வட்டம், 26.07.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

பல்லடம் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 26.07.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"முடிவுரை:*
> *திருமதி. P.சரஸ்வதி, க/பெ பொன்னுசாமி, எண் 268, கன்னியங்கிணறு, குட்டப்பாளையம், நத்தக்காடையூர் வழி, காங்கேயம், திருப்பூர் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில், மனுதாரரோ, மனுதாரர் சார்பாக வேறு நபர்கள் யாருமே விசாரணையில் கலந்து கொள்ளாததால் செயற்பொறியாளர்/இ&பே/காங்கேயம் அவர்களால் 31.01.2022 அன்று வழங்கப்பட்ட பதில் மனுதாரருக்கு திருப்தி அளித்ததாக கருதப்படுகிறது. ஆகையால் தங்களது மனு இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.12.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P.குணசேகர செந்தில் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு. V. கணேஷ், செயற்பொறியாளர்/ இ&ப/ காங்கேயம் மற்றும் திரு. N. சாய் ஹரி ஹர கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர்/ C&I / காங்கேயம், பல்லடம் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், குட்டப்பாளையம் கிராமம், பழைய சர்வே எண் 794 / 1, புதிய சர்வே 173 / 1, விஸ்தீரணம் 3 ஏக்கர் 25 செண்ட் & பழைய சர்வே எண். 794 / 3. புதிய சர்வே எண். 173 / 3, விஸ்தீரணம் 2 ஏக்கர் 45 செண்ட் ஆனது, கடந்த 21.02.1984ம் தேதியன்று, எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் எண். 305/ 1984-ன் படி மேல்முறையீட்டாளரின் கணவர், திரு பொன்னுசாமி (லேட்), த/பெ வேலுச்சாமி (லேட்) அவர்களுக்கு சொந்தமானது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 கடந்த 08.03.2007 ஆம் தேதியன்று தன்னுடைய கணவர், உடல்நிலை சரியில்லாத காரணமாக காலமாகிவிட்டார் எனவும் கடந்த 03.05.2007-ம் தேதியன்று, தன்னுடைய கணவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றின் அடிப்படையில், தான் (1), தனது மகன், குணசேகரசெந்தில் (2), கலையரசி (3) ஆகிய மூவரும் வாரிசுதாரர்கள் எனவும், மேற்படி சொத்தில், விவசாய மின் இணைப்பு எண் 078-001-526 Tariff-IV உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்படி மின் இணைப்பில் இருந்து மின்சாரம் வரும் மின் கம்பியை, மேற்படி சொத்துக்கு அருகில் உள்ள நபர்கள், தங்களுடைய சொத்தை ஏமாற்றி அபகரிக்க வேண்டும் என்ற குற்ற எண்ணத்தில் அடிக்கடி துண்டித்துவிடுவதாகவும், இதுபற்றி மேற்படி எதிர்மனுதாரர்களிடம் பலமுறை புகார் அளித்தும் மின்வாரியம் சார்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அதற்கு பின்னிட்டு, கடந்த 06.07.2021 ஆம் தேதியன்று புதிதாக ஓர் மின் கம்பம் அமைத்து தர வேண்டி ஓர் கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 09.07.2021-ஆம் தேதியன்று பெற்றுக் கொண்டதாகவும், அதனையும் மேற்படி மின்கம்பியை சட்டத்திற்கு புறம்பாக துண்டித்து இடையூறு ஏற்படுத்தி வரும் நபர்கள் ஆட்சேபணை தெரிவித்து ஓர் மனுவினை மேற்படி எதிர்மனுதாரர்களிடம் தாக்கல் செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 அடிப்படை முகாந்திரம் / போதிய ஆதாரம் இல்லாமல், தாக்கல் செய்யப்படும் ஆட்சேபணை மனுக்களை, சரிவர ஆய்வு செய்யாமல் /சரி பார்க்காமல் மேற்படி ஆட்சேபணை மனுக்களை மின்சார வாரியம் கருத்தில் கொண்டு தங்களுடைய மனுவினை ஏற்க மறுப்பது சட்டத்திற்கு புறம்பானது & ஏற்கத்தக்கது அல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 அதற்கு பின்னிட்டு கடந்த 10.12.2021 ஆம் தேதியன்று மேற்படி எதிர்மனுதாரர்கள் முன்னிலையில் மேற்படி புகார் மனுவில் தொடர்புடைய விவசாய மின் இணைப்பு தொடர்பான கள ஆய்வு பணி மேற்கொண்டதாகவும், அப்பொழுது மேற்படி எதிர்மனுதாரர்கள் புகாரில் சொல்லப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பின் மின் கம்பிகள் துண்டித்து இருப்பதை கண்டறிந்து அது தொடர்பான புகைப்பட & வீடியோ ஆதாரங்களை சேகரித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மின் கம்பத்தில் உள்ள மின்சார பெட்டியில் உள்ள மின் கம்பி ஆனது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் எனவும், மேற்படி சொத்துக்களை சேதப்படுத்துபவர்கள் மீது மின்வாரிய அதிகாரிகள் காவல்துறையில் புகார் அளித்து சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க தவறியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேற்படி வாதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்களை தனிநபர்கள் சேதப்படுத்துவது தண்டிக்கத்தக்க குற்றச் செயலாகும் எனவும், அதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான மின் கம்பிகளை அறுத்து பொதுச்சொத்தை சேதப்படுத்தி தங்களுக்கு மின்சாரம் கிடைத்துவிடக்கூடாது என்ற குற்ற எண்ணத்தில் செயல்பட்டு வரும் அனைவர் மீது, உரிய சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்க / பரிந்துரை செய்ய வேண்டியது அவசர அவசியமாகவும், நீதியின் நலனுக்கு உகந்ததாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 இது சம்பந்தமாக கடந்த 16.12.2021 ஆம் தேதியன்று எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஷை புகார் மனுவினை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மின் பகிர்மான

வட்டம், பல்லடம் அவர்களிடம் தாக்கல் செய்து புகார் மனுவினை மன்றம் கடந்த 17.12.2021–ம் தேதியன்று பெற்றுக் கொண்டதாகவும், புகார் மனு தொடர்பாக மேல்முறையீட்டாளருக்கு எந்தவொரு அழைப்பாணையும் அனுப்பவில்லை எனவும், தனது புகார் மனு தொடர்பாக தனது தரப்பு வாதங்கள் கேட்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 தனது புகார் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் இல்லாத காரணத்தினால், கடந்த 09.06.2022 தேதியன்று "த.அ.உ.ச. 2005"–ன் கீழ், ஓர் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் அம்மனுவினை, மன்றம் கடந்த 13.06.2022ம் தேதியன்று பெற்றுக் கொண்டதாகவும், மன்றம் கடந்த 02.08.2022–ம் தேதியிட்டு, ஓர் பதிலை வழங்கி, தனக்கு கடந்த 08.08.2022 ஆம் தேதியன்று பெற்றுக் கொண்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 கடந்த 16.03.2022 தேதியன்று தனக்கு ஓர் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் ஆனால் அவ்வாறு எந்தவொரு கடிதமும் தன்னால் பெறப்படவில்லை எனவும், அதன் காரணமாக கடந்த 23.03.2022 தேதியன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ள முடியவில்லை எனவும், அவ்வாறு தனக்கு கடிதம் அனுப்பியிருந்தால் அதனை எதிர்மனுதாரர்களே தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 அதைப் போன்றே மனு தொடர்பாக கடந்த 21.06.2022–ம் தேதியன்று மேல்முறையீட்டாளர் ஆகிய தனக்கு ஓர் கடிதம் அனுப்பியுள்ளதாகவும், ஆனால் அவ்வாறு எந்தவொரு கடிதமும் தன்னால் பெறப்படவில்லை எனவும், அதன் காரணமாக கடந்த 28.06.2022–ம் தேதியன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ள முடியவில்லை எனவும், அவ்வாறு தனக்கு கடிதம் அனுப்பியிருந்தால், அதனை எதிர்மனுதாரர்களே தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேல்முறையீட்டாளர் தனக்கு கடிதங்கள் அனுப்பியது தொடர்பாக எந்தவொரு ஆதாரங்களும் எதிர்மனுதாரர்கள் வழங்க முடியாத பட்சத்தில், புகார் மனு தொடர்பாக

தனது தரப்பு வாதங்களை கேட்டு அறியாமல், முறையான, சட்டப்படியான விசாரனை மேற்கொள்ளாமல், கடந்த 28.06.2022–ம் தேதியன்று, உத்தரவு பிறப்பிக்கப்படுள்ளது என்பது நிரூபணம் ஆகின்றது எனவும் அவ்வாறு தனக்கு கடிதம் அனுப்பியிருந்தால் அதனை எதிர்மனுதாரர்களே தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 இம்மனுவில் மேல்முறையீட்டாளர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ள சங்கதிகள் தவிர மீதமுள்ள அனைத்தையும், மேற்படி எதிர்மனுதாரர்களே, நிரூபிக்க கடமைப்பட்டவர் எனவும், இம்மனுவிற்கு, தேவைப்படுமாயின்/தக்க தருணத்தில் கூடுதல் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும், இம்மனுவிற்கு, மேற்படி எதிர்மனுதாரர்கள் எதிர் உரை தாக்கல் செய்யும்பட்சத்தில் அந்த எதிர் உரைக்கு பதிலுரை தாக்கல் செய்யும் உரிமையுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 இம்மனுவின் மீது உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க தவறும்பட்சத்தில் மேற்படி பொருள்/சொத்து தொடர்புடைய வழக்கில் தங்களையும் ஒரு தரப்பினராக இணைத்து நீதி பெற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவதாகவும் இம்மனுவினை ஏற்க மறுத்தால் தாங்க முடியாத பொருள், பணம், சொத்து இழப்பும், மன உளைச்சலும் & கால விரையமும் ஏற்பட்டுவிடும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 கடந்த 26.07.2022 ஆம் தேதியிட்டு மன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க கோரியும், கடிதம் அனுப்பாமலேயே கடிதம் அனுப்பியதாக ஆதாரங்கள் இன்றி ஒரு பொய்யான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என விசாரணையில் தெரிய வந்தால் ஷை பொருள் தொடர்பான உத்தரவில் தொடர்புடைய அனைவர் மீது உரிய சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவு/பரிந்துரை செய்யக் கோரி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 மேல்முறையீட்டு மனுவின் மீது, உரிய விசாரணை மேற்கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்களை சேதப்படுத்திய அனைவர் மீது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க / பரிந்துரை செய்யக் கோரியும், மேற்படி சட்ட

விரோத செயல்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய தங்கள் துறையின் தொடர்புடைய மின்வாரிய அதிகாரிகள் மீது உரிய சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரியும், தக்கதென கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்க கோரியும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 மின் இணைப்பு எண்.078–001–526ல் இருந்துவரும் மின் கம்பியை அருகில் உள்ளவர்கள் துண்டித்துவிட்டதாகவும் அதை சரி செய்து தர வேண்டி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டதாகவும், வாரிய விதிமுறைப்படி மின் அளவி பெட்டி வரை மின் இணைப்பு உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி மின் இணைப்பின் மின் அளவி பெட்டியில் இருந்துமின் நுகர்வோர் மோட்டாருக்கு செல்லும் சர்வீஸ் வயர் துண்டிக்கப்பட்டதற்கு திரு குணசேகரசெந்தில் அவர்கள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்ததாகவும், அதற்கு மின்வாரிய விதிமுறைகளின்படி மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை மின் அளவி பெட்டி வரை மின்சாரம் இருப்பதை உறுதிசெய்யுமாறு ஆணை பிறப்பித்ததாகவும், மேற்படி மின் இணைப்பில் உயர் நீதிமன்ற ஆணைப் பிறப்பித்தபடியே மின் அளவி பெட்டி வரை மின்சாரம் இருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும், மேலும் மின்வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் எதுவும் சேதமடையவில்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி மின் இணைப்பிற்கு திரு குணசேகரசெந்தில் அவர்கள் தனக்கு சொந்தமான வேறொரு நிலத்தில் மின் கம்பம் அமைத்து பொதுபாதை வழியாக மின்பாதை அமைத்து மின் அளவி பெட்டியை மாற்றி தர வேண்டியிருந்ததாகவும், பொதுபாதையில் மின் பாதை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்ய வாரிய விதிமுறைப்படி கூட்டுதாரரிடமிருந்து ஆட்சேபணையின்மை கடிதம் சமர்பிக்கவில்லை எனவும், மேலும் மேற்படி இடத்தை ஆய்வு செய்கையில் பக்கத்து நிலத்தவரான திரு தங்கராஜ் அவர்கள் தான் பொதுபாதையின் கூட்டுதாரர் என்றும் பொதுபாதையில் மின் பாதை அமைக்ககூடாது என்றும் ஆட்சேபணை தெரிவித்ததாகவும், எனவே திரு குணசேகரசெந்தில் அவர்களிடம் ஆட்சேபணையை நிவர்த்தி செய்து தருமாறும்

அல்லது மாற்றுபாதையை காட்டுமாறும் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இந்நிலையில் கடந்த 13.9.2021 அன்று திரு தங்கராஜ் மற்றும் திருமதி ஜானகி அவர்கள் காங்கயம் உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி பொதுபாதை வழியாக மின்பாதை அமைப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்து மின்வாரிய பொறியாளர்கள் மீது வழக்கு தொடுத்துள்ளதாகவும், வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதாகவும், எனவே வாரிய விதிமுறைப்படி ஆட்சேபணை காரணமாக பொதுபாதையில் கம்பி இழுக்க இயலாது என்று தெரிவித்தும் மாற்றுப் பாதையில் வாரிய விதிமுறைப்படி விண்ணப்பிக்கும் பட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்படும் என்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் மின் பாதை மாற்றி அமைக்கப்படும் என்றும் திரு குணசேகரசெந்தில் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மின் கம்பத்தில் உள்ள மின் அளவி பெட்டி வரை மின்சாரம் உள்ளதாகவும், மின் வாரியத்திற்கு சொந்தமான மின்அளவி பெட்டி வரை எவ்விதமான சேதமும் இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 திருமதி பொ. சரஸ்வதியின் கணவர் திரு பொன்னுசாமி (late) அவர்களுக்கு சொந்தமான பழைய சர்வே எண் 794/1, புதிய சர்வே 173/1, விஸ்தீரணம் 3 ஏக்கர் 25 சென்ட் & பழைய சர்வே எண். 794/3. புதிய சர்வே எண். 173/3, விஸ்தீரணம் 2 ஏக்கர் 45 சென்ட் விவசாய நிலம் இருப்பதாகவும், அவரது நிலத்தில் விவசாய மின் இணைப்பு எண்078-001-526, Tariff IV இருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேற்படி மின் இணைப்பில் இருந்து மின்சாரம் வரும் மின் கம்பியை மேற்படி சொத்துக்கு அருகில் உள்ள நபர்கள் அடிக்கடி துண்டித்துவிடுவதாகவும், இது குறித்து பலமுறை எதிர்மனுதாரர்களிடம் புகார் அளித்தும் மின்வாரியம் சார்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 இது தொடர்பாக எதிர்மனுதாரர் கள ஆயவு மேற்கொண்ட போது வாரிய விதிமுறைப்படி மின் அளவி பெட்டி வரை மின் இணைப்பு சரியாக இருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி மின் இணைப்பின் மின் அளவி பெட்டியில் இருந்து மின் நுகர்வோர் மோட்டாருக்கு செல்லும் சர்வீஸ் வயர் துண்டிக்கப்பட்டதற்கு திரு குணசேகரசெந்தில் அவர்கள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்ததாகவும், உயர் நீதிமன்ற ஆணைக்கிணங்க மின்வாரிய விதிமுறைகளின்படி மின் அளவி பெட்டி வரை மின்சாரம் இருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும், மேலும் மின்வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் எதுவும் சேதமடையவில்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இதன் அடிப்படையில் எதிர்மனுதாரரிடம் உரிய சான்று சமர்ப்பிக்க கோரிய போது எதிர்மனுதாரர் 08.12.2022 அன்று மின் அளவியில் voltage இருப்பதற்கு கீழ்வருமாறு சான்று அளித்துள்ளார்.

R–Y – 427 V, R –N –246 V

Y–B – 430 V, Y –N – 247 V

B–R – 430 V, B –N – 248 V

இதன் மூலம் மேல்முறையீட்டாளரின் மின் அளவி வரை மின்சாரம் நல்ல நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

7.7 மேலும் தனக்கு சொந்தமான வேறொரு நிலத்தில் மின் கம்பம் அமைத்து பொதுபாதை வழியாக மின்பாதை அமைத்து மின் அளவி பெட்டியை மாற்றி தர வேண்டியிருந்ததாகவும், மேற்படி இடத்தை ஆய்வு செய்கையில் பக்கத்து நிலத்தவரான திரு தங்கராஜ் அவர்கள் தான் பொதுபாதையின் கூட்டுதாரர் என்றும் பொதுபாதையில் மின் பாதை அமைக்ககூடாது என்றும் ஆட்சேபணை தெரிவித்ததாகவும், காங்கயம் உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி பொதுபாதை வழியாக மின்பாதை அமைப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்து மின்வாரிய பொறியாளர்கள் மீது வழக்கு தொடுத்துள்ளதாகவும், வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதாகவும், எனவே வாரிய விதிமுறைப்படி ஆட்சேபணை காரணமாக பொதுபாதையில் கம்பி இழுக்க இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேற்கண்ட பத்திகளின் மூலம் மேல்முறையீட்டாளருக்கு மின்சாரம் விநியோகம் செய்வதில் எந்தவொரு குறைபாடும் இல்லையென அறியமுடிகிறது. மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு எண் WP No. 5 of 2019 dated 08.01.2019–இன்படி மின் அளவி பெட்டி வரை மின்சாரம் இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதும், மின்வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் எதுவும் சேதமடையவில்லை என்பதும் உறுதிசெய்யப்படுவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது என தீர்வு செய்யப்படுகிறது.

7.9 இருந்தபோதிலும், மின்வாரியத்திற்கு சொந்தமான சொத்துக்களுக்கு சிலர் சேதம் விளைவிப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இது சம்மந்தமாக பணியமைப்புகளை வேண்டுமென்றே சிதைத்தல் அல்லது தீங்கிழைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு மின்சார மின்வழங்கல் விதி 23(f) இன்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே பின்வரும் காலங்களில் வாரிய சொத்துக்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படின் அவ்விதிப்படி செயல்படுமாறு எதிர்மனுதாரின் கவனத்திற்கு எடுத்துரைக்கப்படுகிறது.

7.10 மேலும் மேல்முறையீட்டாளர் தனது service line–ஐ வேறு பாதையில் மாற்றி அமைக்க விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6) – இன்படியும் மேலும் மின்சார வாரியத்தில் நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் உள்ள மின் அளவி வரை மின்சாரம் சீராக விநியோகம் செய்யப்பட்டிருப்பது தெரிய வருவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

8.2 மேலும், பின்வரும் காலங்களில் வாரிய சொத்துக்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படின் தமிழ்நாடு மின்சார மின்வழங்கல் விதி 23(f)–இன்படி செயல்படுமாறு எதிர்மனுதாரின் கவனத்திற்கு எடுத்துரைக்கப்படுகிறது.

8.3 மேலும், மின்குறைதீர்ப்பாளர் சேவை குறைபாடு பற்றிய முறையீடுகளுக்கு மட்டுமே தீர்வு காண இயலும். இவ்வழக்கில் சேவை சம்பந்தமாக குறைபாடுகள் ஏதும் இல்லை என்று தெரியவருகிறது. எனவே மேல்முறையீட்டாளர் வாரிய அதிகாரிகள் மீது சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரும் மனு மீது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் நுகர்வோரின் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள், 2004–இன்படி மின்குறைதீர்ப்பாளரால் நடவடிக்கை எடுக்க இயலாது என்பதால் அக்கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.4 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 72/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1) திருமதி பொ. சரஸ்வதி, - <u>By RPAD</u>
க/பெ. பொன்னுசாமி (லேட்),
க. எண். 268, கண்ணியங்கிணறு,
குட்டப்பாளையம் அஞ்சல்,
நத்தக்கடையூர் வழி, காங்கயம் தாலுக்கா,
திருப்பூர் மாவட்டம் – 638 108.

2) செயற்பொறியாளர்/ இ&ப/ காங்கேயம்,
பல்லடம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
4/102, PSG Lodge, சென்னிமலை ரோடு,
காங்கேயம், திருப்பூர் – 638 701.

3) உதவி செயற்பொறியாளர்/ C&I / காங்கேயம்,
பல்லடம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SF No. 3/277, பாளையக்கோட்டை ரோடு,
முத்துபாளையனப்பா காம்ப்லெக்ஸ் எதிரில்,
காங்கேயம் – 638 701.

4) மேற்பார்வை பொறியாளர், <u>– By Email</u>
**பல்லடம்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
முதல் தளம், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்,
திருச்சி ரோடு, பல்லடம்.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6) செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7) உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.